## மதிப்பீடு 39

**நீதியுடைமையுடன் செயல்படுவதால் ஏற்படும் நன்மைகளைத் தெரிவு செய்து வண்ணம் தீட்டுக.**

| | | |
|---|---|---|
| 1. விளையாட்டுத் தளவாடங்களை வாழிட நண்பர்களுடன் பகிர்ந்து பயன்படுத்தினேன். | அ. அனைவரும் மகிழ்ச்சியாக விளையாடலாம். | ♡ |
| | ஆ. அதிகாரத்தைச் செயல்படுத்த இயலும். | ♡ |
| | இ. ஒற்றுமை மேலோங்கும். | ♡ |
| 2. வாழிட மாற்றுத் திறனாளியிடம் எவ்விதப் பேதமின்றி பழகுவேன். | அ. வாழிடச் சமூகத்தினரோடு நட்பு வளரும். | ♡ |
| | ஆ. வாழிட மக்களிடையே சமத்துவம் ஏற்படும். | ♡ |
| | இ. வாழிடத்தினரிடையே பொறாமை வளரும். | ♡ |
| 3. வாழிடச் சமூகத்தினர் பொது மண்டபத்தில் விருந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து மகிழ்ந்தனர். | அ. வாழிடச் சமூகத்தினரிடையே விரிசல் ஏற்படும். | ♡ |
| | ஆ. அனைவரும் பொது மண்டபத்தைப் பயன்படுத்தலாம். | ♡ |
| | இ. மண்டபத்தின் பயனை முழுமையாகப் பெற முடியும். | ♡ |
| 4. சமூகத் தலைவர் தம் கடமையை ஆற்றும்போது விருப்பு வெறுப்பின்றி செயல்படுவார். | அ. சமூகத் தலைவர்மீது நன்மதிப்பு ஏற்படும். | ♡ |
| | ஆ. நடுநிலைமை பண்பு வளரும். | ♡ |
| | இ. சமூகத் தலைவர் மீது வெறுப்பு உண்டாகும். | ♡ |
| 5. வாழிடத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் அனைவரும் இனப் பேதமின்றி பங்கெடுத்தனர். | அ. வாழிடச் சமூகத்தினரிடையே சமத்துவம் வளரும். | ♡ |
| | ஆ. நடுநிலைமை பண்பு குறையும். | ♡ |
| | இ. அனைவரும் வாய்ப்பைப் பயன்படுத்தி கொள்ள இயலும். | ♡ |

Scanned with CamScanner
LIVEWORKSHEETS